# டிசம்பர் – 18 – திங்கள்

**புனித கசியான்**

**கடவுளே, அரசருக்கு உமது நீதித்தீர்ப்பை வழங்கும் ஆற்றலை அளியும்: திபா. 72:1**

## முதல் வாசகம் : ஏரேமியா 23 : 5 – 8

ஆண்டவர் கூறுவது இதுவே: இதோ நாள்கள் வருகின்றன. அப்போது நான் தாவீதுக்கு ஒரு நீதியுள்ள "தளிர்" தோன்றச் செய்வேன். அவர் அரசராய் ஆட்சி செலுத்துவார். அவர் ஞானமுடன் செயல்படுவார். அவர் நாட்டில் நீதியையும் நேர்மையும் நிலைநாட்டுவார். அவர்தம் நாள்களில் யூதா விடுதலை பெறும் இஸ்ரயேல் பாதுகாப்புடன் வாழும். "யாவே சித்கேனூ" என்னும் பெயரால் இந்நகர் அழைக்கப்படும். ஆதலால் ஆண்டவர் கூறுவது இதோ நாள்கள் வருகின்றன. அப்போது, "எகிப்து நாட்டிலிருந்து இஸ்ரயேல் மக்களை அழைத்து வந்த வாழும் ஆண்டவர்மேல் ஆணை" என்று எவரும் சொல்லார். மாறாக, "இஸ்ரயேல் குடும்ப மரபினர் தங்கள் சொந்த நாட்டில் வாழும்படி, அவர்களை வடக்கு நாட்டிலிருந்தும் அவர்கள் துரத்தியடிக்கப்பட்டிருந்த அனைத்து நாடுகளிலிருந்தும் அழைத்து வந்த வாழும் ஆண்டவர்மேல் ஆணை" என்று கூறுவர்.

**பதில்பாடல் :** ஆண்டவருடைய காலத்தில் நீதி தழைத்தோங்கும்

## நற்செய்தி : மத்தேயு 1 : 18 – 25

இயேசு கிறிஸ்துவின் பிறப்பையொட்டிய நிகழ்ச்சிகள் அவருடைய தாய் மரியாவுக்கும் யோசேப்புக்கும் திருமண ஒப்பந்தம் செய்யப்பட்டிருந்தது. அவர்கள் கூடி வாழும் முன் மரியா கருவுற்றிருந்தது தெரிய வந்தது. அவர் தூய ஆவியால் கருவுற்றிருந்தார். அவர் கணவர் யோசேப்பு நேர்மையாளர். அவர் மரியாவை இகழ்ச்சிக்கு உள்ளாக்க விரும்பாமல் மறைவாக விலக்கிவிடத் திட்டமிட்டார். அவர் இவ்வாறு சிந்தித்துக் கொண்டிருக்கும்போது ஆண்டவரின் தூதர் அவருக்குக் கனவில் தோன்றி, "யோசேப்பே, தாவீதின் மகனே, உம்மனைவி மரியாவை ஏற்றுக்கொள்ள அஞ்சவேண்டாம். ஏனெனில் அவர் கருவுற்றிருப்பது தூய ஆவியால்தான். அவர் ஒரு மகனைப் பெற்றெடுப்பார். அவருக்கு இயேசு எனப் பெயரிடுவீர். ஏனெனில் அவர் தம் மக்களை அவர்களுடைய பாவங்களிலிருந்து மீட்பார்" என்றார். "இதோ! கன்னி கருவுற்று ஓர் ஆண்மகவைப் பெற்றெடுப்பார். அக்குழந்தைக்கு இம்மானுவேல் எனப் பெயரிடுவர்" என்று இறைவாக்கினர் வாயிலாக ஆண்டவர் உரைத்தது நிறைவேறவே இவை யாவும் நிகழ்ந்தன. இம்மானுவேல் என்றால் கடவுள் நம்முடன் இருக்கிறார் என்பது பொருள். யோசேப்பு தூக்கத் திலிருந்து விழித்தெழுந்து ஆண்டவரின் தூதர் தமக்குப் பணித்தவாறே தம் மனைவியை ஏற்றுக்கொண்டார். மரியா தம் மகனைப் பெற்றெடுக்கும்வரை யோசேப்பு அவரோடு உறவு கொள்ளவில்லை. யோசேப்பு அம்மகனுக்கு இயேசு என்று பெயரிட்டார்.

**தியானம்:** கிறிஸ்து இயேசுவின் பிறப்பைப்பற்றிய அறிவிப்பை எரேமியா தீர்க்கதரியின் வாயிலாக ஏற்கனவே வெளிப்படுத்தப்பட்டுள்ளதை இன்றைய முதல் வாசகத்தில் நாம் பார்க்கின்றோம். "நான் தாவீதிற்கு நீதியுள்ள தளிர் தோன்றச் செய்வேன் அவர் அரசராய் ஆட்சி செலுத்துவார்" (எரே.23:5) ஏனினில் யூதா, இஸ்ராயேல் நகர்கள் பாதுகாக்கப்படவும், விடுதலையடையவுமே அவர் விரும்பினார். இன்று நாங்களும் பாவங்களிலிருந்து விடுதலைபெற்று தூய வாழ்வு வாழவே இறைமகன் இயேசு தூய ஆவியின் வல்லமையினால் உருவெடுத்து இம்மண்ணில் மனிதனாகப் பிறந்தார். (மத்.1:21) யோசேப்பிற்கு மரியாவுடன் மண ஒப்பந்தமாயிருந்தாலும் கூட ஆவியின் வல்லமையால் கருவுற்றிருப்பதை தூதர் அறிவித்த போது ஏற்றுக் கொள்ள முடியவில்லை. இன்று நாங்களும் கூட இறைவனில் விசுவாசம் கொண்டாலும் கூட சில சந்தர்ப்பங்களில் ஏற்றுக்கொள்ள முடியாது தளர்ச்சி அடைந்து விடுகின்றோம். அன்னை மரியாளிடம் வானதூதர் கூறியபோது "நான் கன்னி ஆயிற்றே என்று கூறியவர்" இறைவனின் திட்டம் என்று அறிந்தவராய் "உமது சித்த்தின் படியே ஆகட்டும்" என்று தன்னைத் தாழ்த்திக் கொள்கின்றார். இதைத்தான் "கன்னி கருவுற்று ஒரு ஆண்மகவைப் பெற்றெடுப்பார் அவருக்கு இம்மானுவேல் என்று பெயரிடுவார்" என்பதை லூர்க்.1:21 வசனத்தில் பார்க்கின்றோம். இங்கு முக்கிய கருப்பொருள் என்னவென்றால் நாங்கள் அன்னை மரியாளைப் போன்று தினமும் இறைவார்த்தை வாசித்து அதைத் தியானித்து வாழவேுண்டுமென்பதே. இவ்வாறு எம்மை ஒப்புக் கொடுத்து வாழ்ந்தோமேயானால் நாங்களும் தூய ஆவியானவரால் நிரப்பப்பட்டு இறையாசீரைப் பெற்றுக் கொள்வோம்